உ

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"


| மலர் 2 Vol. 2 | ஈஸ்வர ௵ மார்கழி ௴ 1௳ டிசம்பர்—1937 | இதழ் 9. No. 9. |
| --- | --- | --- |


## திருப்புகழ்.

### திருச்செந்தூர்.

அனிச்சங் காரமுகம் வீசிட மாசறு
துவட்பஞ் சானத டாகம்வி டாமட
அனதின தூவித லாவிய சீறடி மடமானா
அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை ஆவியி டேறிட நெறிபாரா
வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானநி மூடனை
விடக்கன் பாய்நுகா பாழனை போமொழி பகராதே
விகற்பங் கூறிடு மோக விகாரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ
முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதஇ ராவண னீள்பல
முடிக்கன் றோகணை யேவு மிராகவன் மருகோனே
முளைக்குஞ் சீதநி லாவொட 'ராவிரி'
திரைக்கங் காநதி தர்தகி கூவிள
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகோனே

தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தங் தோவென வேகணி யாகிய
திறற்கந் தாவளி நாயகி காமுறும் எழில் வேலா
சிறக்குந் தாமரை யோடையில மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரா பெருமாளே.

பதவுரை.

*முனை சங்கு ஓலிடு - போருக்குரிய சங்குகள் ஓவென்று ஒலிக்கும், நீல மகா உததி - நீல நிறத்தையுடைய பெரிய சமுத்திரத்தை, அடைத்து - (வானர வீரர்களைக் கொண்டு) அணை புதுக்கி, அஞ்சாத இராவணன் நீளபல முடிக்கு - பகைவர்களுக்குப் பயப்படாத இராவணனது உயர்ந்த மணிமகுடந் தரித்த பல தலைகளையும அறுப்பதற்கு, அன்று ஓர் கணை ஏவும் - அந்நாளில் ஒரே ஒரு அம்பினை விடுத்த, இராகவன் - இரகு வம்சத்தி லவதரித்த இராமபிரானது, மருகோனே - மருமகனாக விளங்குபவரே! முளைக்கும் சீத நிலாவொடு - திருப்பாற் கடலிலே தோன்றும குளிர்ந்த பிறைச் சந்திரனையும், அரா - பாம்பையும், விரி திரை கங்கா நதி - விசாலமானதும் அலைகளை யுடையதுமாகிய கங்காநதியையும், தாதகி - ஆத்தி மலரையும், கூவிளம் - வில்வத்தையும, முடிக்கும சேகரர் - தரித்துக் கொண்டுள்ள சடாமகுடத்தையுடைய சிவபெருமானது, பேர் அருளால் வரு - பெருங்கருணையால் அவதரித்த, முருகோனே - முருகப் பெருமானே, தினை செம் கானக - தினைப்பயிர் விளையும் செழிப்பாகிய காட்டகத்தில் வாழுகின்ற, வேடுவர் ஆனவர் - வேடுவர்களானவர்கள், திகைத்து அந்தோ என (ஏ - அசை) - புதிதாக முளைத்ததால் "இது ஏது? என்று" பிரமித்து "ஐயோ! என் செய்வோம்" என்று கூற, கணி ஆகிய - வேங்கை மரமாகி நின்ற, திறல் கந்தா - வலிபொருந்திய கந்தப் பெருமானே! வள்ளி நாயகி காமுறும் - வள்ளி நாயகியார் கண்டு அன்புறும், எழில் வேலா - கட்டழகுடைய வேலாயுதரே! சிறக்கும தாமரை ஓடையில் - மலர்களுக்குள சிறப்புற்றிருக்குந் தாமரை ஓடைகளிலும், மேடையில் - உயர்ந்த உப்பரிகைகளிலும, நிக்கும் சூல் வளை - நல்ல நிறம் பொருந்திய சினைகொண்ட சங்குகள, பால் மணி வீசிய - பால் போன்ற வெண்ணிறமுடைய முத்துக்களை எறிகின்ற (கடற்கரையிலுள்ள), திருச் செந்தூர் வரு - திருச் செந்திலம் பதியில் அடியார் பொருட்டு எழுந்*

தருளி வருகின்ற, சேவகனே - வீரரே!, சுரர் பெருமாளே - தேவர்களால் வணங்கப்படும் பெருமையிற் சிறந்தவரே!, அனிச்சம் - அனிச்ச மலரும், காமுகட் வீசிட மாசு அறு துவள் பஞ்சு - பஞ்சடிக்கும் வில்லின் அடிக்க கடினமாகிய குற்றமுடையவைகள் நீங்கப்பெற்று மெலிய பஞ்சும், அனம் தடாகம் விடா மட அனத்தின் தூவி - அன்பு மிக்கதான தடாகத்தை விட்டு நீங்காத அழகிய (நடையுடைய) அன்னப் பறவையின் மெலிய இறகும், குலாவிய சிறு அடி - மிகவும் மிருதுவாக விளங்குவதால் கொண்டாடுகின்ற சிறிய பாதங்களையுடைய, மட மாதரா - அழகிய மானைப் போன்ற மகளிரது, அருக்கன் போல - சூரியனைப்போல், ஒளி வீசிய - பிரகாசிக்கின்ற, மாமரகத பைம்பூண் அணி - சிறந்த மரகத மணிகள் பதித்த பசுமை நிறம் பொருந்திய ஆபரணங்களை யணிந்துள்ள, வார் முலை மேல - இரவிக்கையோடு கூடிய தனங்களின் மேல், முகம் அழுத்தும் பாவியை - முகத்தையும் பார்வையையும் வைத்து அழுத்திக் களிக்கின்ற பாவியும், ஆவி இடேற்ற நெறி பாரா - ஆன்மாவானது உய்யும் நெறி இன்னதென்று ஆராய்ந்தறியாத, வினை சண்டாளனை - தீய காரியங்களைப் புரியும் சண்டாளனும், வீணனை - வீண காரியங்களைப் புரிவோனும், நீள் நிதி தனைக்கண்டு - பெரிய செல்வமுடைமையைக் கண்டு அதன் பெருக்கத்தை நினைத்து அகங்காரத்தைக் கொண்ட முழு மூடனும், விடக்கு அன்பாய் நுகர் பழனை - மாமிசத்தை அன்பாக உண்ணுகின்ற பாழனும், ஓர் மொழி பகராதே - ஒப்பற்ற மொழியான தேவரீரது சடக்கர மந்திரத்தை உச்சரிக்காமல், விகற்பம் கூறிடு - சாஸ்திர விரோதமான வார்த்தைகளையே பேசுகின்ற, மோக விகாரனை - மோகவிகாரத்தை யுடையவனும், அறத்தின் பால் ஒழுகாத மூதேவியை - தரும நெறியில் நின்று ஒழுகாத மூதேவியுமாகிய அடியேனை, விளித்து உன் பாதமதை நீ தர - தேவரீர கருணையால் அழைத்து தங்களுடைய திருவடி ரட்சையை என் முடிமேல் சூட்ட, நான் அருள் பெறுவேனோ - அடியேன் அந்த அனுக்கிரகத்தைப் பெற மாட்டேனோ?

## பொழிப்புரை.

போருக்குரிய சங்குகள் ஓவென்று ஒலித்துக்கொண்டிருக்கும் நீல நிறம் பொருந்திய பெரிய சமுத்திரத்தில் அணை கட்டி பகைவர்களுக்கு அஞ்சாத இராவணனது மணிமகுடந் தரித்துள்ள பல தலைகளும் அற்றுவிழ ஒரே ஒரு கணையை ஏவிய ரகுவீரராகிய ஸ்ரீராம

பிரானது மருமகராக எழுந்தருளி யிருப்பவரே! பாற்கடலில் தோன்றிய குளிர்ந்த பிறைச் சந்திரனையும், பாம்பையும், விசாலமான நும் அலைகளையுடையதுமாகிய கங்கா நதியையும், ஆத்திமலரையும், வில்வத்தையும் தரித்துக் கொண்டுள்ள சடாமகுடத்தையுடைய சிவ பெருமானது பெருங் கருணையால் (உலகம் உய்யும் பொருட்டு) அவ தரித்த முருகப் பெருமானே! தினைபபயிர் விளையும் செழுமையான கானகத்தில் வசிக்கும (நம்பி முதலிய) வேடுவர்கள் (புதிதாகத் தோன்றியதால்) "இது எது" என்று திகைப்புற்று "ஐயோ! இதற்கு என் செய்வோம" என்று கூறும்படி வேங்கை மரமாகி நின்ற வல்லபமுடைய கந்தமூர்த்தியே! வள்ளி நாயகியார் அன்புறும் கட்டழகிற் சிறந்த வேலாயுதப் பெருமானே! மலர்களுக்குள் சிறந்த தாமரை ஓடைகளிலும உபபரிகைகளிலும் நல்ல நிறம் பொருந்திய சினைச்சங்குகள் பால் போன்ற வெண்ணிற முத்துக் களைக் கொழிக்கும் கடற்கரையில் விளங்கும் திருச்செந்தூர் என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வீரரே! தேவர்களுக்குள் பெருமை யிற் சிறந்தவரே! (மிகவும் மெல்லியதாகிய) அனிச்சமலரும், பஞ் சடிக்கும் வில்லாலடிக்க கடின பொருளகளாகிய குற்றம் நீங்கிய மெல்லிய பஞ்சும், அன்புடையதான தடாகத்தை நீங்காத அழகிய அன்னப்பறவையின் மெல்லிய இறகும், தமது மென்மையிலும் மிருதுவாக இருப்பதால் கொண்டாடுகின்ற சிறிய பாதஙகளையுடைய அழகிய மானைப்போன்ற மகளிரது சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற சிறந்த மரகத மணிகளிழைத்த பசுமை நிறம பொருந்திய பொன் னாபரணங்களை யணிந்துளள இரவிக்கையோடு கூடிய தனபாரங் களின்மீது முகத்தையும (பார்வையையும) ஆசைப் பெருக்கத்தால் அழுத்துகின்ற பாவியும், ஆன்மா ஈடேறுகின்ற நன்னெறியை ஆராய்ந்து பாரக்காது தீயகாரியஙகளைப் புரியும் சண்டாளனும், வீண காரியங்களைப் புரிவோனும், பெரிய செல்வ முடைமையைக் கண்டு அகங்கரிக்கும நிர்மூடனும், மாமிசததை அன்பாக உண்ணுகின்ற பாழனும், தேவரீரது ஒப்பற்ற மொழியாகிய சடக்கர மந்திரத்தை அன்புடன் உச்சரிக்காமல் சாஸ்திர விரோதமான குதர்க்க வார்த் தைகளைப்பேசுகின்ற மோகவிகாரனுமாகிய அடியேனைத் தேவரீர் திரு வருட் பெருக்கமுடையவராதலால் வலிந்து அழைத்து தமது திரு வடியி லணிந்துள்ள பாதுகைகளை என் முடிமீது சூட்ட அடியேன் அந்த அனுக்கிரகத்தைப் பெறுவேனோ?

விரிவுரை

அனிச்சம் :—

அனிச்சமலர் என்பது மிகவும் மென்மையுடைத்து. அது மோந்தால் வாடும். அத்தகைய மெல்லிய இம்மலரின் மென்மையைப்பற்றி தெய்வப் புலவர்

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்றதனால் நன்கு புலனாகின்றது.

இத்தகைய மெல்லிய அனிச்சப் பூவைக் காட்டிலும், மெல்லிய பஞ்சு அன்னப்பறவையின் மெல்லிய இறகு இவைகளைக் காட்டிலும் மாதரடி மென்மை யுடைத்து.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்

—திருக்குறள்.

ஆவி ஈடேறிட நெறிபாரா :—

"ஆன்மா ஈடேறும் நெறி எது" என்று ஆராய்ந்து பார்த்தல் அவசியம். அந்நெறி பக்தி நெறியே யாகும். அந்நெறியே சென்றால் பழவினைகள் கெட்டு மலநீக்கமுற்று சிவமாந்தன்மையை எளிதில் பெறலாம்.

"பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

—மணிவாசகனார்.

வினைச் சண்டாளனை :—

சண்டாளர் என்பது ஒரு தனிப்பட்ட குலமன்று; பிறப்பினாலே சண்டாள குலம் என்பது இல்லை; சண்டாளத்துவம் எவரிடத்தில் இருக்கிறதோ அவரெல்லாம் சண்டாளரே. பிறப்பினாலேயே உயர்வு தாழ்வைக்குறித்துப் பேசுவதை அறிஞர் வெறுக்கின்றனர்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

—உத்தரவேதம்.

தொழிலின் உயர்வு தாழ்வாலேயே குலமும் உண்டாகிறது. பிராம்மண உடம்பு, க்ஷத்திரியர் உடம்பு, என்பது இல்லையாதலால்

குலம் உடம்பைப்பற்றியதல்ல; பிராமமண உயிர், க்ஷத்திரிய உயிர் என்பதும் இல்லையாதலால் குலம் உயிரைபபற்றியதுமல்ல; ஆதலால் தொழிலைப்பற்றியே ஏறபடுகிறது மேறகுலததிற பிறநதான் ஒருவன் இழிதொழிலைப் புரிநதால் மேற்குலததான் எனறு கூறலாமா? சகல ஒழுக்கஙகளும பொருந்தியுள்ளவனை இழிகுலததான் என்று கூறலாமா?

நாஹம் மநுஷ்யோ நசதேவயக்ஷா
நபராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய சூதரா ।
நபரஹ்மசாரீ நக்ருஹீ வநஸ்தே
பிக்ஷுர்நசாஹம் நிஜபோத ரூபம் ॥

—நிர்வாணஷ்டகம.

(இதன் பொருள்) "நான் மனிதனல்ல. தேவனல்ல; யக்ஷனுமல்ல, பிராமமணனலல; க்ஷததிரியனல்ல; வைசியனலல; சூத்திரனல்ல. பிரமசாரியல்ல; கிருகஸ்தனல்ல; வானபரஸ்தனல்ல, சந்நியாசியுமல்ல; ஆகையால் சததிய ஞானாநந்த சொரூபன நான்".

மேற்போந்த திருபபுகழின கருத்தை நீதிநூலும் வலியுறுத்துமாறு காணக.

தூஷகச்ச கரியா சூநயோ நிகருஷ்டோ தீர்க கோபந: ।
சதவார கர்மசண்டாலே ஜாதிசண்டால உத்தம: ॥

பிறரைத் தூஷிப்பவன், நித்தியகருமானுஷ்டானத்தை விட்டவன, அதிக லோபமுளளவன், தீரக்க கோபமுளளவன், இந் நால்வரும் கர்ம (வினைச) சணடாளாகள்; இவர்களைக் காட்டிலும் ஜாதி சணடாளன் என்பவன் உத்தமன்.

பிரமஞானமுணர்ந்தவன் பிராமணன்; அழகிய தணிந்த சிந்தையுடையவன் அநதணன், வேதமோதுபவன் வேதியன், இந்திரியங்களுடன்போராடி அவற்றை வென்று பொறிபுலன்களை அடக்கியாள்பவன் அரசன்; புண்ணியபாவஙகளை நிறுத்து வாணிபஞ் செய்பவன் வைசியன்; புலன்களுக்கு அடிமைப்பட்டவன் சூத்திரன்; பறை வாத்தியத்தை வாசிப்பவன் பறையன்; புலாலுண்பவன் புலையன்; சண்டாளத்துவமுடையவன் சண்டாளன் எனப் பிரித்துணர்தல் வேண்டும்.

வீணனே:—

கிடைத்தற்கரிய வாழ்நாளை அவமாயைகொண்டு விருதாவாகக் கழிப்பவர் வீணர் எனப்படுவர். நம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு

கணமும் மிகவும் விலையுயர்ந்த மாணிக்கத்திற்கு நிகரானது. அதனை வீணா களியாடல்களில் கழித்துவிட்டால் யாக்கையும் அழிகிறது. ஆதலால் நம்முடைய காலங்களைச் சிவநெறியில் கழிக்கவேண்டும்.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரனாமங்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

—திருஞானசம்பந்தர்.

நிதிதனைக்கண்டு ஆணவமான நிர்மூடனை:—

அழிகின்ற செல்வத்தைக்கண்டு அதன் நிலையாமையை யுணராது, செருக்குற்று மூடனாக இருத்தல்.

சிறியரே மதிக்குமிந்தச் செல்வம்வந் துற்றஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுளோர் மூகராவர்
பறியணி செவியுளோரும் பயிறரு செவிடராவர்
குறிபெறு கண்ணுளோருங் குருடராய் முடிவரன்றே

—குசேலோபாக்கியானம்.

விடக்கன்பாய் நுகர பாழனை —

விடக்கு - மாமிசம். மோக்ஷ உலகத்திற்கு முதற்படி ஜீவகாருண்யமேயாம். சகல யாகங்களிலும் செய்யும் தானமும், சகல தீர்த்தங்களிலுஞ் செய்யும் ஸ்நானமும், சகல தானங்களின் புண்ணியமும் அஹிம்சா தருமத்திற்குச் சமமாகமாட்டாது. அஹிம்சா தருமத்தை அனுசரித்து நடக்கிறவனுடைய தவம் குறைவற்றது. அஹிம்சா தருமத்தை அனுசரித்து நடக்கிறவன் எப்பொழுதும் யக்ஞம் செய்பவனாக எண்ணப்படுகிறான்

ஸர்வ யஜ்ஞேஷு வா தானம் ஸர்வதீர்த்தேஷு சாலுப்தம்
ஸர்வதான பலம்த்வாபி நைதத்துல்ய மஹிம்ஸயா |
அஹிம்ஸ்ரஸ்ய தபோ(அ)க்ஷயம்
அஹிம் ஸரோய ஜதே ஸதா ||

—மஹா பாரதம், அனுசாசனிக பாவம்.

ஓர் மொழி .—

பிரணவமந்திரம் எனவும் பொருள் கொள்ளலாம்.

விளித்துன் பாதுகை நீ தர :—

பாவியும், சண்டாளனும், வீணனும், மூடனும், பாழனும், மோகனும், மூதேவியுமாகிய அடியேனை குற்றம் நோக்கிக் கைவிடா

மல் தேவரீர் திருவருட்பெருக்கால் வலிந்து அழைத்து பாதுகை யைச் சென்னிமேற் றந்து திருவருள் புரியவேண்டும்.

தினைச்சேங்கானகவேடுவா . . . . . கனியாகிய :—

மூவா தேவாதிகள் தம்பிரானாகிய முருகப்பெருமான், மாமுனி வன் புணர்மானுதவு தனிமானாகிய வள்ளிபிராட்டியாரைத் திரு மணஞ்செய்வான் வேடவடிவங்கொண்டு, அப்பிராட்டியார் காக்குந் தினைவனம்போந்து, வேடர்குலக்கொடியுடன் உரைநிகழ்த்திக்கொண் டிருக்குங்காலை, வேடர்கள் சூழ நம்பிராஜன் ஆங்கு வந்தான். அது கண்டு அறுமுகப்பெருமான் பயந்தவரைப்போல வேங்கைமரமாக நின்றார். வேதங்கள் வேர்களும் அடியுமாக, சிவாகமங்கள் நடுப் பாகமும், பலவித கலைகள் கவடுகளுமாக மந்திரவடிவான மரமாயி னார்.

ஆங்கது காலை நன்னி லடிமுதன் மறைகளாக
வோங்கிய நடுவணெல்லா முயர்சிவ நூலதாகப்
பாங்கமர் கவடுமற்றும் பல்கலையாகத் தானோர்
வேங்கையி னுருவமாகி வேற்படை வீரனின்றான்

—கந்தபுராணம்.

பெண்களை நேசிப்பவன் எத்துணை வலியுடையோனாயினும் மரம் போல் அசைவற்றுச் செயலற்று நிற்பான் என்பது அதனுடைய தத்துவம்

துறவர் கோடியடிகள் கூசாது போய்வருட
காடிபுலி திரிகடியவாரான கானிலேமிகு
தளிர்கணியி னிளமான தேயாகிநீடியுயர் குன்றுலாவி

—(உறவின்முறை) திருப்புகழ்.

## கருத்துரை.

சேதுபந்தனம் புரிந்து இராவண வதஞ்செய்த இரகுவீரரது மருகரே! மதி, நதி, பாம்பு, ஆத்தி, வில்வம் இவைகளை முடிக்குஞ் சிவமூர்த்தியின் புதல்வரே! வேடுவராக வேங்கைமரமாகிய கந்தப் பெருமானே! வள்ளிநாயகி அன்புகொள்ளும் வேலாயுதரே! செந்தி லம்பதியில் வாழும் பெருமாளே! மாதராசையால் மயங்கும் பாவி யும், வினைச்சண்டாளனும், செல்வச்செருக்கு மூடிய மூடனும், புலா லுண்ணும் பாழனும், மோகவிகாரனும், அறநெறியில் ஒழுகாத மூதேவியுமாகிய அடியேனை அழைத்து தமது பாதுகையைத்தர அடி யேன் அருள்பெறுவேனோ?

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

अहं सर्वदा दुःख भारावसन्नो
भवान्दीनबन्धु स्त्वदन्यं नयाचे ।
भवद् भक्तिरोधं सदाक्लुप्त बाधम्
ममाधिं द्रुतं नाशयोमासुतन्त्वम् ॥

3 3 2 4
(24) அஹம் ஸர்வதா து:க பாராவ ஸன்னோ
4 1 3 4 3
பவான் தீனபந்து ஸ்த்வதன்யம் நயாசே |
4 3 4 4 3 3 4
பவத் பக்தி ரோதம் ஸதா க்லுப்த பாதம
4 3
மமாதிம் த்ருதம் நாசயோமா ஸுத! த்வம் ||

## பதவுரை.

ஹே உமாஸுத! - ஓ உமாதேவியின் புத்திரரே!
அஹம் - நான்,
ஸர்வதா து:கபாராவஸன்ன: - துக்கபாரத்தினால் தளர்வுற்றவன்,
பவான் தீனபந்து: - தேவரீரோ தீனர்களுக்குப் பந்துவுமாக இருக்கிறீர்,
த்வதன்யம் நயாசே - தேவரீரைவிட்டுப் பின் ஒருவரை நான் வேண்டேன்,
அத: - ஆகையினால்,
பவத் பக்திரோதம் - தேவரீரிடத்தில் பக்தியைக் கெடுக்கிறதும்,
ஸதாக்லுப்தபாதம் - எப்போதும் துன்பத்தையே செய்வதுமான,
மம ஆதிம் - என் மனக்கவலையை,
த்ருதம் நாசய - விரைவில் நாசம் செய்யவேண்டும்,

## பொழிப்புரை.

ஓ உமையின் புதல்வரே! அடியேன் துன்பத்தினால் தளர்வுற்றிருக்கிறவன்; தேவரீரோ என்போன்ற ஏழைகளைக் காப்பாற்றுகிறவராகவுமிருக்கிறீர், என் துன்பத்தை ஒழிக்கும்படி பிறதெய்வங்களை வேண்டவும நான் பிரியப்படவில்லை. ஆகையால் தேவரீரது திருவடிகளில் வைத்திருக்கும பக்திக்குத் தடையாய் நின்று என்னை எக்காலத்தும் துன்புறுத்திவரும கவலையைத் தீர்த்து காப்பாற்றவேண்டும்.

இதனால் ஏழைபங்காளனாகிய முருகவேளிடம் மெய்யன்புவைத்த உத்தமர்கள் எக்காரணத்தாலும் பிறதெய்வங்களை வேண்டார் எனவும், அத்தகைய அடியார்களைக் காப்பதே முருகனது முதற்கடமையென்றும் தெரிவிக்கப்பட்டது.

अपस्मारकुष्ट क्षयार्शः प्रमेह
ज्वरोन्मादगुल्मादि रोगा महान्तः ।
पिशाचाश्च सर्वे भवत्पत्र भूतिम्
विलोक्यक्षणात्तारकारे द्रवन्ते ॥

(25) அபஸ்மார குஷ்ட$^{2}$ க்ஷயார்ச: ப்ரமேஹ
ஜ்வரோன்மாத$^{3}$ கு$^{3}$ல்மாதி$^{3}$ ரோகா$^{3}$ மஹாந்த: ।
பிசாசாஸ்ச ஸர்வே ப$^{4}$வத்பத்ர பூ$^{4}$திம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே! த்$^{3}$ரவந்தே ॥

## பதவுரை.

ஹே தாரகாரே! - ஓ! தாரகாசுரனைக் கொன்றவரே!

மஹாந்த: - கொடியவைகளான,

அபஸ்மார குஷ்ட க்ஷயார்ச ப்ரமேஹ ஜ்ரோன்மாத குல்மாதி ரோகாஹ: - அபஸ்மாரம (முயலகவலி காக்கைவலி முதலியன) குஷ்டம, க்ஷயம, மூலம், பிரமேகம், ஜ்வரம், பைத்தியம், குன்மம் முதலிய நோயகளும,

ஸர்வே பிசாசாச்'ச - எல்லா வகையான பேய்களும்,
பவத்பத்ரபூதிம் விலோக்ய - தேவரீருடைய பச்சிலையையும் திருநீற்றையும் பார்த்துவிட்டு,
க்ஷணாத் த்ரவந்தே - க்ஷணத்திலேயே அகன்றுவிடுகின்றன.

## பொழிப்புரை.

ஓ தாரகாரியே! அபஸ்மாரம் முதலிய கொடிய வியாதிகளும், அவ்வாறே எல்லா வகையான பிசாசுகளும், தேவரீருடைய பச்சிலையிலடங்கிய திருநீற்றுப் பிரசாதத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே அகன்றுவிடுகின்றன.

பச்சிலை—பன்னீர் மரத்தின் இலை; இதில் அடங்கிய திருச்செந்தூர் திருநீற்றுப் பிரசாதத்தின் பெருமை உலகமறிந்த உண்மை

दृशि स्कन्दमूर्तिः श्रुतौ स्कन्दकीर्ति
मुखे मे पवित्रं सदा तच्चरित्रम् ।
करे तस्य कृत्यं वपुस्तस्य भृत्यम्
गुहे सन्तु लीना ममाशेष भावाः ॥

(26) த்ருஶி ஸ்கந்த மூர்த்தி: ஸ்ருதௌ ஸ்கந்த கீர்த்திர்
முகே மே பவித்ரம் ஸதா தச் சரித்ரம் |
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ் தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீனா மமாசேஷ பாவா: ||

## பதவுரை.

மே த்ருஶி - எனது கண்களில்,
ஸ்கந்தமூர்த்தி: - ஸ்கந்தருடைய மூர்த்தியும்,
ஸ்ருதௌ ஸ்கந்தகீர்த்தி: - காதுகளில் ஸ்கந்தருடைய கீர்த்தனங்களும்,
முகே - முகத்தில்,
ஸதா பவித்ரம் தச்சரித்ரம் - எப்போதும் பரிசுத்தமான அவரது சரித்திரமும்,
கரே தஸ்ய க்ருத்யம் - கையில் அவருடைய க்ருத்யமும் (பூஜையும்),
*வபு ஸ்தஸ்ய ப்ருத்யம் - சரீரத்தில் அவனுடைய பணிவிடையுமாக,
மம அசேஷ பாவா: குஹே லீனா: ஸந்து - குஹனிடத்தில் லயித்திருக்கட்டும்.

---

* தனௌ தஸ்ய ப்ருத்யம் என்றும் பாடம்.

வணங்கிக்கொண்டு சூழ்ந்தார்கள். பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக்கினார்கள். நான்கு வேதங்களும் பிரணவமும் பலகலைகளும் ஒலித்தன; விந்தையர்கள் கீதம்பாடினார்கள், சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள், பூதர்கள் சாமரம் வீசினார்கள்; நூறு கோடி பூதர்கள் சூழ்ந்தார்கள், இடபக்கொடிகள் நெருங்கிச் சென்றன; உமையம்மையாரோடு இடபமேற்கொண்ட முக்கட்பெருமான் திருக்கோயிலினின்றும் நீங்கி, கயிலைமலையைக் கடந்து, இமயமலைச் சாரலிலுள்ள சரவணப்பொய்கையை அடைந்தார் அம்மையும் அப்பரும் ஆறுமுகங்கொண்ட முருகக்கடவுளுடைய ஆடலின் தன்மையைப்பார்த்து உளம் பூரித்து திருவருள்செய்து சரவணப்பொய்கைக் கரையில் நின்றார்கள். அத்தடாகத்தில் ஆறுதிருவுருவங்கொண்டுலாவி வீற்றிருந்தருளும் குமாரக்கடவுள் அம்மையப்பரைக்கண்டு, திருமுகமலர்ந்து திருவுளங்களித்தார் அப்பொழுது ஆலமுண்ட அண்ணல் அம்பிகையை நோக்கி, "நீ போய் உன் புதல்வனைக் கொண்டுவருவாய்" என்று பணித்தருள, பிராட்டியார் இடபத்தினின்றுமிறங்கி திருவுளத்தெழுந்த பேரன்பின் பெருக்கால் விரைந்து சென்று, சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருந்த தமது திருக்குமாரருடைய ஆறுருவங்களையும் இரண்டு திருக்கரங்களாலும் அன்போடு எடுத்துத்தழுவி, ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட ஓருருவமாக வண்ணம் செய்தருளினார். அக்குமாரசுவாமி, அம்பிகையால் ஆறுருவமும் ஒன்றாகி, கந்தர் என்னுந் திருநாமத்தைப் பெற்றார்

பார்வதியம்மையார் தம்மாலே தழுவப்பட்ட குமரவேளுடைய முடிதோறும் மோந்து அழகிய முதுகைத்தடவலும், அவ்வம்மையாருடைய திருமுலைகள் சுரந்து பால் சொரிந்தன. ஆதிநாயகனது திருவருளாகியும் நிருமலமாகியும் பரஞானமாகியுமுள்ள தம்முடைய இளமுலைகள் பொழிந்த ஞானப்பாலை ஓர் இரத்தினவள்ளத்திலேற்று, முருகக்கடவுளுக்கு ஊட்டினார். ஊட்டியபின் அக்குமாரக்கடவுளைக் கொண்டுபோய், எம்பெருமான் திருமுன்னே வணங்குவிப்ப, பெருமான் தமது திருக்கரங்களினால் எடுத்து, மார்பிலணைத்து, பெருங்கருணையோடு தமது மருங்கில் இருத்தினார். பின்பு எல்லாவுலகங்களையும் ஈன்றருளிய பிராட்டியையும் திருக்கரத்தால் எடுத்து தமது இடப்பக்கத்தில் இருத்தியருளினார். அம்மையாருக்கும் அப்பருக்கும் இடையில் குமாரமூர்த்தி எழுந்தருளியிருந்தார்.

ஏலவார்குழ லிறைவிக்கு மெம்பிரான் றனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலையானதோர் றாழ்வின்றி வைகுமா றொக்கும்.

இடபத்தின்மீது அரனாருக்கும் அம்பிகைக்கும் இடையே ஆறுமுகப்பெருமான் எழுந்தருளியிருத்தலைக்கண்டு, பிரமா விட்டுணு இந்திரன்முதலிய இமையவர்கள் கடல்போல் ஆரவாரித்து அணுகி, பக்கத்தும் முன்னும்பின்னுமாக நெருங்கி "சிவபெருமானுடைய நெற்றிநாட்டத்தினின்றும் தோன்றியருளிய குமாரசுவாமியே! அடியேங்கள் சூரபன்மனால் மிகவும் வருந்தினேம், இனிச் சிறியேங்களை ஆட்கொண்டருளுக" என்று விண்ணப்பஞ்செய்து பூமாரி பொழிந்து, வணங்கி எழுந்து வாழ்த்தினார்கள்.

அப்பொழுது கார்த்திகை மகளிர்கள் சிவபெருமானைப் பேரன்போடு வணங்கி எழுந்தார்கள். கண்ணுதற்கடவுள் அவர்கள்மீது திருவருள்நோக்கஞ்செய்து, "நம்முடைய குமாரனாகிய இவன், உங்களால் வளர்க்கப்பட்டமையால், கார்த்திகேயன் என்னும் பெயரைப் பெறக்கடவன். யாவராயினும் உங்கள் நக்ஷத்திரத்திலே இவனை மெய்யன்போடு வழிபடுவாராயின், அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்து, முத்தியை அருளிச்செய்வேம்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

உமாதேவியார் தம்முடைய திருக்குமாரரைச் சென்று தழுவிய பொழுது சொரிந்த திருமுலைப்பால் நதிபோலப் பெருகிச் சரவணப் பொய்கையிலே புகுதலும், தங்கள் தந்தையாராகிய பராசர முனிவருடைய சாபத்தினால் அப்பொய்கையுள் மீன்களாய்த் திரிந்த *ஆறு சிறுவரும் அப்பாலைப் பருகினார்கள். பருகிய உடனே மீன்வடிவம் நீங்கி முன்னைவடிவங்கொண்டு எழுந்து, சிவபெருமானை வணங்கித் துதித்தார்கள். அவர்களைச் சிவபெருமான் நோக்கி, "நீங்கள் திருப்பரங்குன்றிலே தவஞ்செய்துகொண்டிருங்கள். சிலநாளாயின பின் நம்முடைய குமாரனாகிய இவன்வந்து உங்களுக்கு அருள்செய்வான்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட சிறுவர்களறுவரும் மனமகிழ்ந்து சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சென்

---

*பராசர குமாரர் அறுவர் பெயர் :—தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, மாலி.

ார்கள். சிவபெருமான் கார்த்திகைமகளிர்களையும் பிரம விட்டுணு முதலிய தேவர்களையும் தங்கள் தங்கள் இடத்துக்குச் செல்லும்வண்ணம் விடைகொடுத்து, திருக்கைலாசமலையையடைந்து, முருகக்கடவுளோடும் உமாதேவியாரோடும் இடபவாகனத்தினின்றும் இறங்கி நடந்து, செம்பொன்னாலயத்திற்சென்று சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். நவவீரர்களும் இலக்க வீரர்களும் தங்கள் தலைவனாகிய முருகக்கடவுளை நறுமலர்களாலேபூசித்து வணங்கித்துதித்து அவர் தொண்டின் வழி நின்றார்கள்.

மகாதேவருக்கும் மலைவளர்காதலிக்கும் இடையே எழுந்தருளியிருந்த முருகக்கடவுள் தம்முடைய தம்பியர்களோடும் எழுந்து, தம் கருணையினால் திருவிளையாடல் செய்யத் திருவுளங்கொண்டருளினார். திருவடிகளிலே தண்டையும் சிலம்பும் கழலும் சதங்கையும் ஒலிக்க, திருவரையிலே கிங்கிணி இசைக்க, திருச்செவிகளிலே குண்டலமும், திருமார்பிலே மதாணியும், திருநெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கத் திருவிளையாடல் செய்வார்.

மன்றுதோ றுலாவுமலர் வாவிதோ றுலாவுந்
துன்றுசிறு தென்றல்தவழ் சோலைதோ றுலாவும்
என்றுமுல வாதுலவும் யாறுதோ றுலாவுங்
குன்றுதோ றுலாவுமுறை யுங்குமர வேளே.

சபைதோறும் உலாவுவார், வாவிதோறும் உலாவுவார், மந்தமாருதம் வீசும் மலர்ச்சோலைதோறும் உலாவுவார், வற்றாத ஆறுதோறும் உலாவுவார், குன்றுதோறும் உலாவுவார், குளத்தில் உலாவுவார், அந்தணர் சாலையில் உலாவுவார், சிவதலந்தோறும் உலாவுவார், கடப்பமரம் நிற்கும் இடந்தோறும் உலாவுவார், வடமொழி தென்மொழி கற்கும் கழகந்தோறும் உலாவுவார், பூமியில் உலாவுவார், திக்குகளில் உலாவுவார், கடல்களில் உலாவுவார், ஆகாயத்தில் உலாவுவார், சந்திர சூரியர் முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் உள்ள இடங்களில் உலாவுவார், கந்தருவர் சித்தர் கருடர் முதலாயினோருடைய உலகங்களில் உலாவுவார், இந்திரலோகத்தில் உலாவுவார், இருடிகளுடைய உலகத்தில் உலாவுவார், பிரமலோகத்தில் உலாவுவார், நாராயணரது உலகத்தில் உலாவுவார், சத்தியலோகத்தில் உலாவுவார், சிவலோகத்தில் உலாவுவார், பிருதிவி அண்டங்களெங்கும் உலாவுவார், அப்பு அண்டங்களெங்கும் உலாவுவார், தேயு அண்டங்களெங்கும் உலாவுவார், வாயு அண்டங்களெங்கும் உலாவுவார், ஆகாய அண்டங்களெங்கும் உலாவுவார், மற்றைப் புவனங்களிலும் உலாவு

வார், ஆறு திருமுகங்களோடும் பாலவடிவத்துடன் உலாவுவார், ஒரு திருமுகத்துடன் குமாரராய்த் திரிவார், அந்தணராய்த் திரிவார், முனிவராய்த்திரிவார், வீரராய்த் திரிவார், கால்நடையாகச் செல்லுவர், குதிரைமீது செல்லுவர், யானைமீது செல்லுவர், தேர்மீது செல்லுவர், சிங்கமீது செல்லுவர், விமானமீது செல்லுவர், மேகத்தின்மீது செல்லுவர், மணியை அசைப்பர், புல்லாங்குழலை இனிமையாக ஊதுவர், கோட்டை இசைப்பர், வீணை வாசிப்பர், நானாவித வாத்தியங்களை முழக்குவர், கல்லுமுருகும்படி இசைபாடுவர், கூத்தாடுவர்.

இவ்வாறு முருகக்கடவுள் பலதிருவுருவங்கொண்டு எவ்விடத்தும் திருவிளையாடல் செய்யும்பொழுது, உலகமாதாவாகிய உமாதேவியார் அதனையறிந்து வியந்து, முக்கட்பெருமானது முளரியந்தாள்களை வணங்கிநின்று, "எம்பெருமானே! நம்முடைய குமாரன் சிறு குழவிப்பருவத்தே செய்யும் அடற்றொழில் எனக்கு அதியற்புதமாக இருக்கின்றது. ஆராயுங்கால் அவனுக்கு ஒப்பாவார் பிறரில்லை மாயையில் உமக்கு ஒப்பாவன்; அவனுடைய பெருமையை அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளும்' என்று விண்ணப்பஞ் செய்தார். ஞானாம்பிகை இவ்வாறு அறியாதார்போல வினவுதலும், சிவபெருமான அவரை நோக்கி, "உமையே! எல்லா உயிர்களும் அறிந்து உய்யும்பொருட்டு உன் குமாரனது இயல்பை நீ நம்மிடத்து வினவினாய்; புவனேசுவரி! அவனது இயல்பை நாம் கூறுவோம் கேள். நமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய குமாரனை கங்கையிலே கொண்டு சென்று சரவணப்பொய்கையிலே விட்டபட்டமையால் காங்கேயன் என்றும், சரவணப்பொய்கையிலே தோன்றினமையால் சரவணபவனென்றும், கார்த்திகைப்பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் என்றும், உன்னாலே ஆறுருவமும் திரட்டி ஒன்றாக்கப்பட்டமையால் கந்தன் என்றும், பெயர் பெற்றான் கிரிகுமாரி! நமக்கு அறுமுகங்களுண்டு; அவை தாமே கந்தனுக்கு முகங்களாயின; தாரகப்பிரமமாயுள்ள நமது ஆறெழுத்தும் ஒன்றாகி உன் குமாரனுடைய மந்திரமாகிய சடக்ஷரமாயிற்று. ஆதலால் அறுமுகக் கடவுள் நமது சக்தியே; அவனுக்கும் நமக்கும் வேற்றுமையில்லை. அவன் நம்மைப்போல யாண்டும் நீக்கமறநிறைந்திருக்கிறான். பாலன் போலத் தோன்றுவன், எல்லாவற்றையும் உணர்ந்த முற்றறிவினன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்குச் செல்வத்தையும் ஞானத்தையும் முத்தியையும் கொடுக்கவல்லவன்.

ஆதலி னமது சத்தி அறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவில னியாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

*பார்வதி! யான் நிட்களன்; நீ அழிவிலா சத்தி; நாமிருவரும் பகுதியும் விகுதியும் போலவுஞ் சொல்லும் பொருளும் போலவும், பிரிவில் பொருளாய் மதிக்கவுள்ளோம். அங்ஙனம் நீ சொல்லும் யான் பொருளும் நீ சகமும் யான் பதியுமென ஆவோம். யான் (சிருட்டி திதி சங்கார திரோபவ அனுக்கிரகமெனும்) ஐந்தொழிற் கதிபனும், ஐம்முகமுடையவனுமாகிய சதாசிவன், நீ பலவாறாக இருப்பினும் ஒருமுகமுடைய பரமேசுவரி, குமாரன் உனது சுவரூபத்தையும் எனது சுவரூபத்தையுங் கொண்டுள்ளானாகலின் அவன் ஆறுமுகனெனப்படுகின்றனன். இவன் பிரபஞ்ச காரியார்த்தம் ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரிகின்றனன்*

சிவோஹந் நிஷ்கள: பூர்ணச் சக்திஸ்த்வ மநபாயிநீ
ப்ரக்ருதி ப்ரத்யயாகாரௌ வாகர்த்தௌ ஸம்ப்ருக்தௌ கௌமதே!
த்வஞ் ச ஸம்ஸ்தோர்த்தோ ஸ்வயம்பூ: ஜகத்த்வம் பதிரஸ்ம்யஹம்
பஞ்சக்ருத்ய பராச்சாஹம் பஞ்சவக்த்ராஸ் ஸதாசிவ:!
ஏகவக்த்ராஸி பஹுதா பிந்நாபி பரமேச்வரீ!
த்வந்மயோ மந்மயோ யஸ்மாத் ஷட்வக்த்ர: பரிகீர்த்தித:.
பஞ்சக்ருத்ய பரோ யந்த்ர ப்ரபஞ்ச ஸ்யாஸ்ய லீலயா ||

*பிரிய நாயகி! பிராம்மணர்கட்கு (பிரமத்தைத் தியானித்திருப்பார்க்கு) அல்லது வேதங்கட்கு யாம முக்கிய தேவதையாகலின் யாம பிரமணியமாவோம்; நங்குமாரன் அங்ஙனமாய விசேடணங்களிற் சுராசுரர்களால் நமஸ்கரிக்கத்தக்க சுப்பிரமணியனெனப்படுகின்றனன்.*

ப்ராஹ்மணா நாமஹந்தேவ: ஸ்வதராம் மந்த்ஸுத: ப்ரியே!
ஸ்ஸுப்ரஹ்மண்யக ஸமாக்யாத: ஸுராஸுர நமஸ்க்ருத: ||

*கௌரீ! இனிமேல் அவன் பிரமனை வேதத்துக்கெல்லாம் மூலமாய் நின்ற பிரணவமந்திரத்தின் பொருளை வினவி, அவன் அதனையறியாது மயங்கக்கண்டு, அவனைச் சென்னியிலே குட்டிச் சிறைப்படுத்தி, தானே உயிர்களனைத்தையும் பலநாட் படைத்துக்கொண்டிருப்பன். அதன்பின் தாரகாசுரனையும், சிங்கமுகாசுரனையும், சூரபன்மனையும், மற்றைய அசுரர்களையும் வதைத்து, அரியயன் ஆகண்ட*

உ

ஓம் குஹாய நம:

# கற்பு

## சாவித்திரி.

(252-வது பக்கத்தொடர்ச்சி)

உத்தமகுணங்களுக்கு உறைவிடமாகிய சாவித்திரிதேவி இவ்வண்ணம் மாமன் மாமிக்கும், கணவனுக்கும் பணிவிடை செய்துகொண்டு அந்த ஆச்சிரமத்தில் வசித்திருந்தனள். அவர்களுக்குத் தவஞ்செய்துகொண்டே சிலகாலம் சென்றது. வாட்டமடைகின்றவளும், அல்லும் பகலும் நினைந்துகொண்டேயிருப்பவளுமான சாவித்திரிக்கு நாரதரால் சொல்லப்பட்ட வாக்கியம் நெஞ்சத்தைவிட்டு நீங்காதிருந்துவந்தது.

---

லன் முதலிய அமரர்களுடைய அல்லலைநீக்கி, அவர்களுக்குப் பேரருள் செய்வன். இவையெல்லாம் பின்னர் நீ காண்பாய்.

பிரியமுள்ள கல்யாணீ! புவனேசுவரீ! சகத்திடை வைகு தேவர், மனிதர், மிருகம் முதலிய உயிர்கண்மாட்டே வீரியம், செல்வம், காந்தி, கல்வி, அறிவு என்பவற்றுள் எத்துணை எத்துணை யுள்ளனவோ அவையனைத்தும் குமாரனுடைய மகிமையே என்பது இங்ஙனஞ் சுருங்கச்சொன்னேன; விரித்து விளம்பத்துணியின் நூறு கோடி வருடகாலத்தும் முடிவு பெறாதே"

யத்ர யத்ர ஜகத்யஸ்மிந் தேவதிர்யங் நராதிஷு!
வீர்யம் ஸ்ரீரதி காந்திர் வித்யாஜ்ஞாநாதிகம்ப்ரியே!
தத் ஸர்வ மஸ்ய கல்யாணி விபூதி ரிதி நிச்சிதம்!
ஸம் க்ஷிப்யோக்தா விபூதிஸ்தே புத்ரஸ்ய புவனேஸ்வரி!
நசக்யம் விஸ்தரா வக்தும் வர்ஷகோடி சதைரபி ||

என்று திருவாய்மலர்ந்தருளினார். எம்பெருமாட்டியார் தமதருமைத் திருக்குமாரருடைய பெருமையைக்கேட்டுத் திருவுளமகிழ்ந்து எழுந்தருளியிருந்தார்.

(தொடரும்).

சின்னாட்களுக்குப் பின் ஒரு சமயத்தில் சத்தியவான் மரிக்க வேண்டிய காலம் வந்தது. நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிற சாவித்திரிக்கு நாட்கள் செல்லச்செல்ல, நாரதர் சொல்லை நினைந்து நினைந்து துன்பமும் பயமும் வளர்ந்துகொண்டே வந்தது. அவ்வுத்தமியானவள், நான்காவது நாள் பதி மரிக்கும் நாளென்று நன்றாக ஆலோசித்து, மூன்று நாள்களால் நிறைவேற்றத்தக்க ஒரு விரதத்தை மேற்கொண்டு இரவும் பகலும் நியமத்துடனிருந்தாள். திரயோதசியில் உபவாச ஆரம்பம், பிரதமையில் பாரணைசெய்கிறது, இந்த விரதத்தினால் கணவனுக்கு ஆயுள் வளருகிறது. தன் மருமகளாகிய சாவித்திரி உபவாசத்துடன் விரதமிருப்பதைக் கேட்டு சத்தியவானது பிதாவாகிய த்யுமத்சேனன் மிகவும் மனவருத்தமுள்ளவனாக எழுந்திருந்து, சாவித்திரியை நோக்கி இனிமையாகக் கூறுவான் "ராஜகுமாரி! உன்னால் மிகக் கடுமையான இந்தக்காரியம் தொடங்கப்பட்டிருக்கிறது; மூன்று நாள்கள் உணவில்லாமலிருப்பதென்பது ஒருவராலும் அனுஷ்டிக்க முடியாதது" என்றான். சாவித்திரி "பிதாவே! நீங்கள் மனவருத்தப்படவேண்டாம்; நான் விரதத்தை இனிது முடிப்பேன், காரியம் நிறைவேறுவதற்கு விடா முயற்சியே காரணம்" என்றாள். த்யுமத்சேனன் "அம்மா! நான் 'விரதத்தை விட்டுவிடு' என்று சொல்வதற்கு எவ்விதத்தாலும் சக்தியுள்ளவனல்லேன்; என்னைப்போன்றவன் 'விரதத்தை முடிவுபெறச் செய்' என்கிற பொருத்தமான வசனத்தைச் சொல்லவேண்டும்" என்று சொன்னான்.

பெரிய மனமுள்ள த்யுமத்சேனன் இவ்வண்ணமுரைத்துவிட்டுப் பேசாமலிருந்தான். நிற்கின்ற சாவித்திரியானவள் கட்டையானவள்போலக் காணப்பட்டாள். கணவன் மரணம் நாளை நேர்வதாக இருக்கையில், துக்கத்தையுடையவளும் நின்றுகொண்டே இருப்பவளுமான சாவித்திரிக்கு அந்த இரவானது மிக்க வருத்தத்துடன் சென்றது. கீர்த்தியுள்ளவளான சாவித்திரி நீராடி தூய்மையாக இருந்துகொண்டு "நாரதமுனிவரால் குறிப்பிடப்பட்ட அந்தக் கணவனது மரணதினம் இன்று" என்று நிச்சயித்து, ஜ்வலிக்கின்ற அக்கினியில் ஓமஞ்செய்து, சூரியன் உதித்து நான்குமுழ உயரம் மேலே வந்தவுடன் காலைக்கடன்களைச் செய்து விரதத்தை முடித்து, பிறகு வயதுமுதிர்ந்தவர்களான எல்லா அந்தணர்களையும், மாமியாரையும், மாமனாரையும் முறையேவணங்கி, இருகரங்களையும் குவித்துக்கொண்டு

நியமத்துடன் நின்றாள். தபோவனத்தில் வசிக்கின்ற எல்லாத் தவசிகளும் சாவித்திரியின்பொருட்டு ஸௌமங்கல்யத்தைக் கொடுக்கக் கூடியவையும் இதமானவையும் மங்களகரமானவையுமாகிய ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். தியானயோகத்தில் பற்றுள்ளவளும் தவமுள்ளவளுமான சாவித்திரிதேவி, 'மனத்தினால் இவ்வண்ணம் ஆகட்டும்'' என்று அந்த ஆசிர்வசனங்களை ஏற்றுக்கொண்டாள், மகினுடைய மரண சமயம் நெருங்கிவருவதால் நாரதர் வசனத்தை எண்ணி எண்ணி ஏங்கி துன்பவாரிதியில் வீழ்ந்து துடித்துக்கொண்டிருந்தாள். பிறகு, தனியிடத்திலிருக்கிற அவளை மாமியார் மாமனார்களிருவரும் அடைந்து, "விரதம் எப்படி உபதேசிக்கப்பட்டதோ அப்படியே அது உன்னால் நிறைவேற்றப்பட்டது, உணவுகொள்ளும் சமயம் வந்துவிட்டது, அம்மா! அடுத்துச் செய்யவேண்டியதைச் செய்'' என்று அன்புடன் சொன்னார்கள். சாவித்திரி "சூரியன் அஸ்தமயத்தை அடைந்தபின் விருப்பம் நிறைவேற்றப்பட்ட நான் உணவு கொள்வேன், இது என் மனத்திலுள்ள எண்ணம், இப்படி சபதஞ்செய்திருக்கிறேன்'' என்றாள். இவ்வாறு சாவித்திரி உணவு செய்யும் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, சத்தியவான் தோளில் கோடாலியை வைத்துக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான்.

சாவித்திரி கணவனைக் கண்டு, 'நீர் ஒருவராகச் செல்லலாகாது; நான் உம்மோடு கூட வருவேன், ஏனெனில் உம்மைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன்'' என்றாள். சத்தியவான "கண்மணி! நீ இதற்கு முன் காட்டில் சென்றதில்லை, வழியுந் துன்பமானது, விரதத்தாலும் உபவாசத்தாலும் இளைத்தவளான நீ எவ்வாறு நடப்பாய்?"என்றான். சாவித்திரி! நாயக! உபவாசத்தால் எனக்கு வாட்டமுமில்லை, களைப்புமில்லை; காட்டுக்கு வருவதில் விருப்பமுள்ள என்னை நீர் எவ்வகையாலும் தடுக்கலாகாது'' என்றாள். சத்தியவான் "பெண்ணே! உனக்கு வருவதில் விருப்பமிருந்தால் உன் விருப்பப்படி செய்வேன்; என்னுடைய பெற்றோரிடம் விடைபெற்றுக்கொள்; இந்த தோஷம் என்னை அணுகாது'' என்று சொன்னான்.

பெரிய விரதமுள்ள அந்த சாவித்திரி, மாமனாரையும் மாமியாரையும் வணங்கி, இதோ என் கணவன் பழங்களைக் கொண்டுவருவதற்காகப் பெரும் காட்டுக்குச் செல்லுகிறார்; அவரோடு போக

எனக்கு நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்; இப்போது அவரைப் பிரிந்திருத்தல் தகாது; உடன் செல்ல விரும்புகிறேன்; மாதா பிதாக்களுக்கு உணவுதேடப் புறப்படுவதால் இவரைத் தடுக்க முடியவில்லை, வேறு காரியமாக வனத்துக்குப் புறப்பட்டால் தடுக்கலாம், நான் தங்களுக்கு மருகியாகவந்து ஒரு வருடகாலம் ஆகிவிட்டது, நான் இந்த ஆச்சிரமத்தைவிட்டு இதுவரையிலும் வெளியிற் சென்றதில்லை; மேலும் பூத்திருக்கிற காட்டைக் காண்பதற்கு மிகவும் ஆசையிருக்கிறது'' என்றாள். த்யுமத்சேனன் 'இந்த சாவித்திரியானவள், அவள் பிதாவினால் எனக்கு மருமகளாகக் கொடுக்கப்பட்டகாலமுதல் இதுவரையில், தனக்கென்று ஒன்றும் பிரார்த்தித்ததாக எனக்கு நினைவில்லை, ஆதலால் இவ்வுத்தமி விரும்பினவண்ணம் அடையட்டும், அம்மா! சத்தியவானுடன் செல்லும்; அவனுடன் சுகமே திரும்பிவருவாய்'' என்று வாழ்த்தி விடைகொடுத்தான்.

மாமி மாமன்களிடத்தில் விடைபெற்ற அட்டாங்கசி துயரப்படுகின்ற மனத்துடன் சிரிப்பவள்போலப் பதியுடன் சென்றாள். விசாலமான கண்களுள்ள அந்த சாவித்திரி, எங்கும் அழகாயிருப்பனவும் மயில்கள் நிறைந்துள்ளதுமான காடுகளைக் கண்டாள். சத்தியவான் சாவித்திரியைப்பார்த்து, "பரிசுத்தமாக ஓடுகின்ற நதிகளையும், பூத்திருக்கிற சிறந்த மரங்களையும் பார்" என்று இனிய சொல்லைச் சொன்னான். குற்றமற்ற சாவித்திரி ஒவ்வொருகணமும் கணவனை நன்கு கவனித்துப் பார்த்துவந்தாள். குறித்தகாலம் வந்தவுடன் நாரதர் வசனத்தை நினைந்து கணவனை மாண்டவனாகவே எண்ணினாள். அவள் உள்ளத்தை இரண்டுபோலச் செய்துகொண்டு, அந்தக்காலத்தின்மீது ஒரு எண்ணமும், கணவனைக் கவனிப்பதில் ஒரு எண்ணமுமுடையவளாக மெல்ல நடந்து சென்றாள்.

மிகு ஆற்றலுடைய சத்தியவான் மனைவியுடன் பழங்களைப் பறித்துக் கூடையை நிரப்பினான்; பிறகு கட்டைகளைப் பிளந்தான். கட்டையைப் பிளக்கின்ற அவனுக்கு வேர்வையுண்டாயிற்று; அதனால் அவனுடைய தலையில் வலியுண்டாயிற்று; பொறுக்கமுடியாத துன்பத்துடன் அந்த உத்தமன் அன்புடைய மனைவியை அணுகி "இந்தக் கட்டையைப் பிளந்ததனால் எனக்குத் தலைவலியுண்டாயிற்று; சாவித்திரியே! அங்கங்கள் சோர்வடைகின்றன; இதயந் துடிக்கிறது; என் நிலைமை தவறுகிறது; என் தலை சூலத்தாற் குத்துவது போலிருக்கிறது; திசைகளனைத்தும் சுற்றுகின்றன; என்னுடைய

மனமானது சக்கரத்தில் ஏறியிருக்கிறது; கல்யாணி! ஆதலால் தூங்குவதற்கு விரும்புகிறேன், எனக்கு நிற்கச் சக்தியில்லை" என்றான். உள்ளம் நடுக்கமுற்ற சாவித்திரி கணவன் அருகில் வந்து மடியில் அவனுடைய தலையை வைக்கும்படி செய்து பூமியில் உட்கார்ந்தாள். பிறகு, தவமுள்ள அம்மங்கை நாரதருடைய வசனத்தை ஆலோசிக்கின்றவளாக அந்த நாளையும் அந்த முகூர்த்தத்தையும் அந்தக்கணத்தையும் நினைத்தாள்; "ஆ கஷ்டம்! அந்தக்காலம் இதோ வந்துவிட்டதே" என்று பெருங்கவலையுற்று பரிதவித்தாள், சிறிது நேரத்திற்குப்பின் சிவந்த ஆடையை உடுத்தவனும், மகுடந்தரித்தவனும், நல்ல தேகமுள்ளவனும், சூரியனுக்கொப்பான ஒளியுள்ளவனும், கருமை நிறமுள்ளவனும், சிவந்த கண்களையுடையவனும், பாசத்தைக் கையில் வைத்திருப்பவனும், பயத்தை உண்டுபண்ணுகிறவனுமான ஒரு புருஷன் சத்தியவானுடைய பக்கத்தில் அவனையே உற்றுப்பார்த்துக் கொண்டு நிற்பதைக்கண்டாள்.

சாவித்திரிதேவி, அவனைக்கண்டு திடுக்கிட்டு உடனே எழுந்திருந்து கணவனுடைய தலையை மெல்லக் கீழே வைத்துவிட்டு, கை குவித்து உள்ளம் நடுங்கி, நாக்குழறி, "உம்மைத் தேவரென்று அறிகின்றேன்; இந்தச் சரீரமானது மானிடர்க்குரியதாயில்லை; தேவேசரே! உம்மை அறிய விரும்புகிறேன், சொல்லும்; நீர் யார்? எதைச் செய்ய விரும்புகிறீர்?" என்று வினவினாள். இயமன், "சாவித்திரி! நீ பதிவிரதையாயிருக்கிறாய், அப்படியே தவமுடையவளுமாயிருக்கிறாய், அதனால் உன்னோடு பேசுகிறேன்; கல்யாணி! நீ என்னை இயமன் என்று அறி; உன்னுடைய கணவனும் இராஜகுமாரனுமான இந்த சத்தியவான் ஆயுள் முடிந்தவனாக இருக்கிறான்; நான் அவனைப் பாசத்தால் கட்டிக்கொண்டுபோவேன்; இதனை நான் செய்ய விரும்புகிறேனென்று நீ அறிவாயாக" என்றான்,

சாவித்திரி, "பகவானே! மனிதர்களைக் கொண்டுபோவதற்கு உம்முடைய தூதர்களன்றோ வருவார்களென்று கேட்டிருக்கிறேன், பிரபுவே! அவ்வாறிருக்க, யாது காரணம்பற்றி நீரே நேரில் வந்திருக்கிறீர்" என்று வினவினாள். அறக்கடவுள் சாவித்திரிக்குப் பிரியத்தைச் செய்யும்பொருட்டு அவளை நோக்கித் தன் எண்ணம் முழுவதும் உள்ளபடி சொல்லத்தொடங்கினான். "இவன் தருமத்தோடு கூடினவன்; நல்ல உருவமுள்ளவன்; குணக்கடல்; நல்லொழுக்க

முடையவன், என்னுடைய தூதர்களால் கொண்டுபோகத்தகாதவன்; ஆகலால் நானே நேரில் வந்தேன்" என்று சொன்னான். பிறகு, கூற்றுவன் சத்தியவானுடைய உடம்பிலிருந்து பாசத்தாற் கட்டப் பட்டவனும், தனக்கு வசப்பட்டவனும், ஒரு கட்டைவிரலளவுள்ளவ னுமான புருஷனை வலிந்து இழுத்தான். உயிர் வாங்கப்பெற்றதும் உயிர்ப்பு நீங்கியதும் ஒளி கெட்டதும் அசைவற்றதுமாகிய அந்த உடல் விரும்பத்தகாத தோற்றமுள்ளதாயிற்று. யமனோ அவனது உயிரைப்பற்றிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்றான். மகா பதி விரதையாகிய சாவித்திரி துக்கத்தால் துடிதுடித்து கணவனுடைய உடலை மறைத்துவைத்துவிட்டு அறக்கடவுளையே பின்தொடர்ந்து சென்றாள். இயமன் அம்மா! சாவித்திரி! திரும்பிச்செல்; அவ னுக்குச்செய்யவேண்டிய பிரேத கருமங்களைச் செய்வாயாக; உனக் கும் உன் கணவனுக்கும் ஏற்பட்ட சம்பந்தம் நீங்கியது, நீ வரத்தக்க வரையில் வந்துவிட்டாய்" என்றான்.

சாவித்திரி, "எந்த இடத்திற்கு என் பதி கொண்டுபோகப்படு கிறாரோ, அல்லது தாம் எங்கு போகிறீரோ, அந்த இடத்தில் நானும் செல்லவேண்டும், இதுதான் நிலைபெற்ற தருமம்; தவத்தினாலும் குருபக்தியினாலும் பதிபக்தியினாலும் விரதத்தாலும் உம்முடைய அனுக்கிரகத்தாலும் நான் வருவது தடுக்கப்படவில்லை, தத்துவார்த் தத்தைக் கண்டறிந்த பண்டிதர்கள் நேயர்கள் நேயத்தை ஏழுபதங் களால் அடையத்தக்கதென்று சொல்லுகிறார்கள்; ஆகையால் நட்பை முன்னிட்டு ஒரு விஷயத்தைச் சொல்வேன் · அதனைக் கேட். பீராக இந்திரியங்களை ஜயிக்காதவர்கள், வனத்தில் கிருகஸ்தர்க ளுக்கும் வானப்பிரஸ்தர்களுக்குமுரிய வைதிக தருமத்தையும், பிரம சாரிகளுக்குரிய குருகுலவாசத்தையும், சர்வசங்கபரித்யாகரூபமான சன்யாசத்தையும் அனுஷ்டிக்கிறதில்லை; ஆத்மஞானத்திற்காகத் தருமத்தைச் செய்யவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார் கள்; ஆகையால் சாதுக்கள் தருமத்தை முதன்மையாகக் கூறுகிறார் கள் சாதுக்களுக்குச் சம்மதமான ஓர் ஆச்சிரமதருமத்தால் எல் லாரும் அந்த ஞானமார்க்கத்தை அடைகிறார்கள்; ஆகையால் சாதுக் கள் ஆத்மஞானத்திற்கு கிருகஸ்த வானப்ரஸ்த தருமத்தை பிரதான மாகச் சொல்லுகிறார்கள். நான் மேலே சொல்லப்பட்ட இரண்டாவ தான நைஷ்டிக பிரமச்சரியத்தையும் மூன்றாவதான சன்யாசத்தை யும் விரும்பவில்லை" என்றாள். இயமன், "புகழுள்ளவளே! நீ

திருப்த, உதாத்த முதலிய ஸ்வரங்களோடு கூடின உன்னுடைய இந்த வாக்கினால் மகிழ்ச்சியுற்றிருக்கிறேன்; இச்சமயத்தில் இவனுயிரைத்தவிர வேண்டிய வரத்தைக்கேள், இகழப்படாதவளே! எல்லா வரங்களையும் உனக்குக் கொடுக்கிறேன்" என்றான்.

சாவித்திரி, "தருமராஜரே! என்னுடைய மாமனார் தம்முடைய இராஜ்யத்தை இழந்து கண்களையுமிழந்து காட்டில் துன்புற்றிருக்கிறார்; அந்த அரசர் உமமுடையதிருவருளால் கண்களைப்பெற்று நல்ல பலசாலியாய் சூரியனுக்கும் அக்கினிக்கும் ஒப்பானவராக விளங்க வேண்டும்" என்று வேண்டினாள். இயமன், "அம்மா! நான் உனக்கு அந்த வரத்தைக் கொடுக்கிறேன், உன்னால் சொல்லப்பட்டது அப்படியே ஆகும், உன்னிடத்தில் வாட்டத்தைக் காணுகிறேன் திரும்பிச் செல். உனக்கு சிரமம் வேண்டாம்" என்றான்

சாவித்திரி, "கணவனுடைய சமீபத்தில் எனக்கு சிரமம் ஏது? பதியிருக்குமிடமே எனக்கு மேலான கதி, எந்த இடத்திற்கு என் பதியைக்கொண்டு போவீரோ அந்த இடமே எனக்குக் கதி, தேவநாதரே! மேலும் என்னுடைய வசனத்தை நீர் அறிந்துகொள்ளும். சாதுக்களுடன் ஒருதரம் சேர்க்கையும் சிறந்ததென்று விரும்பப்படுகின்றது; சிநேகத்தையோ அதைவிடச் சிறந்ததென்று சொல்லுகிறார்கள். மேன்மக்களுடைய நட்பானது வீணாகாது; ஆகையால் சாதுக்களுடைய கூட்டத்திலேயே வசிக்கவேண்டும்" என்றாள். இயமன், "பெண்ணே! உன்னால் சொல்லப்பட்ட வசனமானது மனத்துக்கு அநுகூலமானது, புலவர்களுக்கு அறிவை வளர்ப்பது; நன்மைக்கு ஆதாரமாக இருக்கிறது, மறுபடியும் இந்த சத்தியவானுடைய உயிரைத்தவிர வேறான இரண்டாவது வரத்தைக்கேள்" என்றான்

சாவித்திரி, "தேவசிரேட்டரே! முற்காலத்தில் பகைவரால் கவரப்பட்டதும் தம்முடையதுமான இராஜியத்தை சிறந்த அறிவுடையவரும் அரசருமான அந்த என் மாமனார் அடையவேண்டும்; என்னுடைய மாமனார் சுவதருமத்துடன் இராஜ்யபரிபாலனம் செய்ய வேண்டும் இரண்டாவதான இந்த வரத்தை உம்மிடத்திலிருந்து வரிக்கிறேன்" என்றாள். இயமன், "இராஜகுமாரி! தியுமத்சேன மகாராஜன் தன்னுடைய இராஜ்யத்தை அடைவான், தன்னுடைய தருமத்தினின்றும் தவறமாட்டான்; திரும்பிச் செல், உனக்கு சிரமம் வேண்டாம்" என்றான்.

(தொடரும்)

உ

கார்த்திகேயன் துணை.

# வீட்டு நெறி

“ பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றுவி டற்கு ”

பொய்யா மொழியாகிய நாயனாருளிய மேற்படி குறட்பா பெரும்பாலோரறிந்ததே. இது மிகச் சிறிய வாக்கிய மெனினும், இதில் அம்மகான் அடக்கியுள்ள பொருள் சொல்லொணாப் பெருமை யுடையது. நாயனார் குறளில் முப்பாலே கூறினார் என்று கூறப்படி னும், இதில் மோக்ஷமார்க்கத்தைச் சுருக்கியருளினாரெனலாம் அதை நம் சிற்றறிவிற் கெட்டிய அளவு சுருக்கமாயக் கூறுவாம.

“பற்றற்றான் பற்றினைப் பற்றுக, அப்பற்றைப் பற்று விடற் குப் பற்றுக” என்பது அந்வயம்

பற்றற்றான பற்றினை—எல்லா வஸ்துக்களையும் பற்றி நின்றும் ஒரு பற்றுமில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை.

பற்றுக—இதுவே நன்னெறி யென்று மனத்துட் கொள்க.

அப்பற்றை— (அவ்வாறு மனத்துட் கொண்ட) அதன்கணு பாயத்தை.

பற்றுக—மனத்தாற் செய்க.

பற்று விடற்கு—அநாதியாய் வந்த உடம்பிற் பற்றினை விடுவ தற்கு

அதாவது—“எல்லா வஸ்துக்களையும்பற்றி நின்றும ஒரு பற்று மில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை இதுவே நன்னெறி யென்று மனதுட்கொண்டு, அதன்கண் கூறியுள்ள தியானாதி யுபாயங் களை மனத்தால் செய்க. இப்படிச் செய்வது அநாதியாக உன்னைப் பற்றியுள்ள உடம்பின்பற்று விடுவதற்காக” என்று பரிமேலழகர் உரையருளியுள்ளார். இக்குறள நமது பற்றை யொழித்து நாம் வீட்டையும் நெறியைக் கூறுகிறது.

இதனால் நாம் அறியக் கிடப்பது—பகவான் ஆகாயம்போல் எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறம்புமாக நிறைந்து நின்றாலும்

எதிலும் தாக்கற்றவர். நாம் நம்மைப் பற்றியுள்ள பற்றுக்களொழிவதற்காக அத்தகைய இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். இதற்கு மர்க்கட நியாயம் என்று கூறுவர் மர்க்கடம் என்றால் வானரம். வானரம் தன் தாயைப்பற்றிக்கொண்டு தாய் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அந்தரத்தில் தாவும்போதும், மரத்திலேறும்போதும், பாய்ந்தோடும்போதும் விடாமல் பற்றிக்கொண்டேயிருக்கும். நாம் பகவானை யவ்வாறு பற்றுவது எவ்விதம்? பகவான் பக்திவலையிற் படுவோன் என்று மணிவாசகப்பெருமானாதிய பல ஆன்றோர் கூறியுள்ளார். ஆதலின் பக்தியாலேயே அவனைப் பற்றவேண்டும். ஒரு பொருளை நாம் பற்றிக்கொண்டோமென்றால் அப்பொருளும் நாமும் இரண்டு பொருள்களாகப் பிரியப்பட்டு நிற்காமல் ஏகமாய் ஓரே பொருளாக ஆகிவிட்டிருக்கவேண்டும். வேறு வேறாயிருக்கிறவரையில் நாம் ஆண்டவனைப் பற்றியவர்களல்ல. அவரைப் பற்றுவதற்கு முன்னே அவர் இருக்குமிடம் தெரியவேண்டும். ஆண்டவன் எங்கிருக்கிறார் எனின், அவர் எங்கும் சர்வவியாபியாயுள்ளவர். ஆகையால் நமது உள்ளத்திலேயே யுளர். அவரையன்றி நாமில்லை. கடவுள் நமக்கன்னியம் என்று நாம் கருதும் வரையில் கடவுள் நமக்கு வெகுதூரத்தி லிருக்கிறார். ஆகையால் அவரை யெங்கும் தேடிச் செல்லவேண்டிய கஷ்டமில்லை. அவ்வாறு உள்ளத்திலுள்ளவரை யெவ்வாறு பற்றலாம்?

முதலாவது அவரை யறிந்தாலன்றிப் பற்றமுடியாது. ஏனெனில் அவர் சடப்பொருளல்ல, சித்சொரூபி யாதலின் அறிவாலேயே யவரைப்பற்றவேண்டும். இதனால் அவரை யறிவதே பற்றுதலாகும். எப்படி ஆண்டவனையறிவது? ஆண்டவனை யுள்ளபடி யறியவேண்டுமாயின், ஆரம்பத்தில் எந்தவழி சென்றாலும், கடைசியில் ஒருவழி இருக்கிறது. அவ்வழியாய் அவரை எவரும், யாராயினும் சரி, அறியலாகும். அதாவது, தன்னையறிந்தவனுக்கு ஆண்டவன் பற்றுதவிர வேறு பற்றிராது. ஏனெனின் தன் உண்மையை யறிந்ததும் தேகமுதல் நாம ரூபத தோற்றமாகிய யாவும் அநர்த்தசட துக்கமென்றும், யாவும் பரமான சொரூபமேயென்றும், தெரிந்துவிட, ஆன்மா பரமான்மாவோடு அத்துவிதமடையும்.

"தன்னையறிந் தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே"

என்று தாயுமானவர் கூறியருளினார்.

தன்னைப்பற்றிய மனம் ஒடுங்கவேண்டும். சகுண உபாசனையால் மனதை யடக்கவேண்டும். இவ்வாறு ஆண்டவனை ஏன் பற்றவேண்டுமெனின், நமது அந்நியப்பற்று ஒழிவதற்காக. நமக்கென்ன பற்றிருக்கிறது? நமக்குள்ள பற்று அகப்பற்று புறப்பற்று என்று இருவிதமுண்டு. "நான், எனது" என்றும் அவற்றைக் கூறலாம்.

1. அகப்பற்று — நான் என்னும் அகங்காரமே அகப்பற்று. அது தேகத்தையே தான் என்றபிமானிப்பது.

2. புறப்பற்று — தேகத்திற்குப் புறம்பாகிய தாரம், புத்திரர், மனை, பொன், மாடு முதலியவைகளை எனதுடையவை என்று அபிமானித்தல்.

இவற்றில் அகப்பற்றே புறப்பற்றிற்குக் காரணம். அகப்பற்று அஞ்ஞானத்தாலுண்டாயிற்று. தன் சுய சொரூபத்தை மறந்ததே அஞ்ஞானம். ஆதலின் ஆன்மாவாகிய தன் சுய சொரூபத்தைத் தரிசித்தாலே அகப்பற்று ஒழியும். அப்போது ஆன்மாவையன்றி மற்ற நாமரூபத்தோற்ற மனைத்தும் சடமாகிய அநித்தியப்பொருள்களே யென்றுணர்வதால் இச்சையொழியப் புறப்பற்றும் ஒழியும். இக்குறட்பாவால் இன்னொரு விசேஷம் நாம் அறியவேண்டியிருக்கிறது. "உன்பற்றொழிய ஈசனைப் பற்று" என்று கூறியிருக்கிறதேயன்றி "ஈசனைப்பற்ற உன்பற்றைவிடு" என்று கூறியிருக்கவில்லை யென்பது கவனிக்கத்தக்கது.

சிலர் "இல்லறத்தில் பெண்சாதி பிள்ளைகளோடு கூடவிருந்தால் ஞானத்திற்கு எங்கே முயல்வது, யாவும் விட்டுவிட்டுச் சந்நியாசம் பெற்றாலன்றோ ஞானம் வரும்" என்று கூறிக்கொண்டு ஒன்றையும் விடமுடியாமலும் ஜன்மசாபல்யத்திற்குச் சற்றும் முயலாமலும் அரிதிற் கிடைத்த இவ்வுத்தம ஜன்மத்தை வீணாக்கிவிடுகிறார்கள். மனம் ஒரு பற்றைச் சுலபத்தில் விடாது. வெளிப்பற்றாகிய பெண்டு பிள்ளையாதிகளை விட்டுவிட்டுக் கானகம் சென்றிருந்தாலும் மனதின்கண்ணுள்ள பற்று ஒழியாதவரையில் அவன் சந்நியாசம் ஒரு பயனும் அளிக்காது. ஞானம் உதயமாயின் அந்த அநுபவம் முதிர முதிர எல்லாப் பற்றுகளும் தன்னையறியாமலே (நித்திரை வந்தவன் கையிலுள்ள பொருள் அவனையறியாது தானே நழுவி விடுவதுபோல்) ஒழிந்துபோம்.

அகப்பற்றொழிந்தவன் இல்லறத்திலிருந்தபோதிலும் அவன் ஞானியாவான். கர்மம் அவனையணுகாது. ஒரு செடியை வேரோடு

பிடுங்கிவிட்டுப் பிறகு அதை மணணிற் சொருகிவைத்தால், அது கொஞ்சகாலம்வரை பார்ப்பவருக்குப் பச்சைச்செடிபோல் காணப் படினும் சீக்கிரத்தில உலர்ந்தழியும. இதைபபோலவே அகபபற் றொழிந்தோன் பார்வைக்கு வெளிப்பற்றுகளை உடையான்போல காணபபடினும சொல்பகாலத்தில் அவனது சகலபறறுகளும்ஒழிநது போம்.

புறப்பற்றைமட்டும விட்டுவிட்டு ஒருவன அடவியிற் சென்றி ருந்தாலும் அகபபற்றொழியாதவரையில அவன பறறற்றவனுகான். அவன் மனம், இல்லறததில் 'உலகபோகங்களை யனுபவித்துக்கொண் டிருக்கிறவனுடைய மனதைவிட அதிகமாக உலகபோகங்களை நாடும். ஒரு மரததின் கிளைகளைமட்டும் வெட்டிவிட்டால அது பட்டமரம் போல் தோன்றினும கொஞ்சக்காலததிறகுள துளிர்த்துத்தழைதது முன்னிருநதபடியே அகன்ற விருக்ஷமாய்விடும அதைப்போலவே புறப்பற்றைமட்டும விட்டவன சற்றுத்தவறின இல்லறத்தானிலும் மிக்கத் தாழ்நத நிலையடைவான்.

ஆதலின் ஞானமடைய முயல்வோன் ஆரம்பத்திலேயே இதை விடவேண்டும அதை விடவேண்டும் என்னும் கவலை கொள்ளவே வேண்டாம். அடையவேண்டியதை யடைய முயற்சித்தால் விட வேண்டியது தானே விட்டுப்போம்- அதறகாகவே பற்றுவிடற்கு 'பற்றறறவனைப் பற்றிக்கொள' என்றுரைக்கப்பட்டது.

நாம் அப்பரம்பொருளை யறியவே முயலவேண்டும். அதை யறிந்து பற்றின், அதாவது அந்த நிலையினிறபின் வினையொழியச் சகல பற்றுக்களும் தாமே நீங்கும்.

மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் ஈசுவரனிடம் பக்தி செலுத்தி யவனருளைப் பெற முயலவேண்டும். இன்றேல் மாயை யாகிய அஞ்ஞானமென்னுந திரையை நீக்கி ஆன்மாவை யறிய முடி யாது. பூரணமான பக்தி செலுததுவது அரிதாதலின் நமது முயற் யும் வேண்டும். அதாவது பக்தியும் சாதனையும வேண்டும். இதுவே மனிதஜென்மம்பெற்றதா லடையவேண்டிய பலனையடையும் மார்க்க மாகும்.

கந்தன்

உ

ஓம் குஹாய நம

# குரு சிஷ்ய லக்ஷணம்

(256-வது பக்கம் தொடர்ச்சி)

சனந்தனருடைய மாதாபிதாக்கள் சனந்தனரைத் திருமணம் முடித்துக்கொள்ளும்படி வேண்டினார்கள். சனந்தனரானவர் தாய் தந்தையர் மலரடிதொழுது இரு முதுகுரவர்களையும் நோக்கி, "அன்புடையீர்! அடியேனை இந்தப் பந்தத்தில் வீழ்த்திக் கரைகாணாமல் தவிக்கும்படி விடவேண்டாம். அடியேன் சற்குருவை அடுத்து ஞானோபதேசம் பெற்று மோக்ஷமென்னும் கரை சேருவதற்கு ஆசைப்படுகிறேன்; ஆதலின் விடைதருவீர்" என்றனர். தாய் தந்தையிருவரும் சனந்தனரைப்பார்த்து "என் குலமணிவிளக்கே இளவேனிற்காலத்தில் இலையுதிர்காலம்போல் நின்மனம் துறவை நாடியது. பெரியோர்களும் நீ உலகையெல்லாம் ஒளிபெறப்புரப்பாயென்று மொழிந்தார்கள்; ஆயினும் சிறிதுகாலம் இல்வாழ்க்கையைப்புரிந்து செல்லுதி" என்றனர். சனந்தனர் "தாய் தந்தையீர்! நேற்றிருந்தார் இன்று வெந்து நீறானார் என்ற இவ்வுலகத்தில் சிறிதுகாலம் இருப்போமென்பது என்ன நிச்சயம்? ஆகவே அடியேனைத்தடுக்காமல் உத்தரவு தருவீர்க"ளென்றனர். அவர்கள் குழந்தையின் பிடிவாதத்தைக்கண்டு ஒன்றுங்கூற முடியாமல், "யாங்கள் விரும்பிய கனியே! உனதுளத்தின்படியே நடப்பாய்" யென்று உரைத்தார்கள். சனந்தனர் பெற்றோர்களின் ஆசியைப்பெற்று "கள்ளக்காதலனிடத்தன்பு கலந்துவைத்தொழுகும் உள்ளக் காரிகையைப் போல்" குருநாட்டங்கொண்டு குருவையடையும் நாள் எதுவோ? என்று ஏக்கமேலிட்டவராய், குருநாதனைத் தேடிக்கொண்டு காசிக்கு வந்தார். அவண் வாசஞ்செய்யும் ஸ்ரீ ஆசார்யார் அவர்களைக் கண்ணுற்றனர். 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்ற வாக்கின்படி இவர் முகத்தில் பிரமதேஜஸ் விளங்குகிறது. வாரிஜம்போல் மலர்ந்த முகமும் கருணையலையெறிந்தொழுகும் கண்ணும் அல்லனவற்றை அகற்றும் துணிவுடைய சிந்தையுமுடைய இப்பெரியாரையே

குருமூர்த்தமாக நாம் அடையவேண்டுமென உவகையுற்று, ஆசார்ய ஸ்வாமிகளுடைய திருவடியிற்படிந்து "தவவுருவாய்வரு தவமுனிச் சுடரே! ஆகமும் ஞானமும் அணிகலனுக்கொள் தேசிகவடிவே! கோதிலாத் துணையே! சோதனைவேண்டாம், கோழைஉலகத்துயரம் இனிப் பொறுக்கமாட்டேன், தங்கள் சரணகமலங்களையே தஞ்சமென வந்தடைந்தேன், அபயமென்றருள்வீர். அடியேனை ஆட்கொள்வது தங்கள் கடனே, தமியேனையும் சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டு"மென மீண்டும்பணிந்து குருகுலவாசத்திலிருந்து வந்தார். குருநாதன் வாக்கியமே வேதவாக்கியமென்றும், அவரே தெய்வமெனவும் நினைந்து அடிமைபோல் சதா சர்வகாலமும் பணிவிடை செய்துகொண்டு வரும் நாளில் ஒருநாள் ஆசார்யஸ்வாமிகளானவர் சனந்தனருடனும் மற்ற சீடர்களுடனும் கங்காநதிக்குத்தீர்த்தமாடச் சென்றார். அப்பொழுது சனந்தனர் இக்கரையில் வஸ்திரத்தை வைத்துக்கொண்டிருந்தார். ஆசார்யஸ்வாமிகளோ அக்கரையில் ஸ்நானம் முடிந்து ஈரவேட்டியுடனிருந்ததால், "சனந்தனா! வஸ்திரத்தைக் கொண்டுவா" என்றனர். உடனே சனந்தனரானவர் கங்கையில் பிரவாகமாக ஜலமிருக்கிறதேயென நினைக்கவேயில்லை. குருநாதன் வாக்கியத்தைத் தட்டாமல் செய்வதுதான் சிஷ்யனது கடமை ஆதலின் தன் குருநாதன் சொன்னமாத்திரத்தில் சனந்தனருக்குக் கங்கை ஆழமாகஇருக்கிறதேயென்ற நினைவேமறந்துபோய்விட்டது. கங்கைமேல்நடக்க ஆரம்பித்தார்: கங்கையானவள் இவரது குருபக்தியைக்கண்டு உவகையுற்று ஒவ்வொரு பாதத்திலும் ஒவ்வொரு பத்மம் புஷ்பிக்கச்செய்துத் தாங்கினாள். சனந்தனரானவர் சுகமாகக் கங்கையைக் கடந்து ஸ்ரீசங்கராச்சாரியாரிடம் வந்து வஸ்திரத்தைத் தந்து அடிபணிந்து நின்றனர். அவ்விடமிருந்த எல்லாச் சீடர்களும் பார்த்து ஆச்சரியப்பட்டு அவரது குருபக்தி விசேடத்தை யறிந்து கொண்டாடினார்கள். பத்மங்களால் தாங்கப்பெற்ற பாதத்தையுடையவராதலின் அவருக்குப் பத்மபாதர் என்று காரணப்பெயர் வந்தது. மற்றும் வருவனவற்றாற்காண்க.

குலச்சிறை நாயனார், பெருமிழலைக்குறும்ப நாயனார், அப்பூதியடிகணாயனார், நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், குருநமசிவாயர், ஆருடி, உபமன்யு, மற்ற பெரியோர்களும் குருவருளால் ஞானத்தையடைந்து முத்தியடைந்திருக்கிறார்கள்.

குருபக்தியினால் ஆருடி கங்கையைக் கரையிலாமல் நிற்கவைத் தார். உதங்கருடைய கண்ணீரால் குருபுத்திரியின் கரங்கள் எரிக்கப் பட்டது. இவைபோல் பல பெரியோர்கள் குருபக்தியினால் பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறார்கள். குரு சிஷ்ய சம்பந்தம் மர்க்கட ஞாயம், மார்ஜால ஞாயம், சங்கம ஞாயம் என மூன்றுவகை யாயுளது. தன் குருநாதன் வாக்கியத்தைப் பரிபாலனம் செய்வது மர்க்கட ஞாயம். இதற்குச் சான்று பிரகலாதாழ்வார் கருவிலிருக்கும் பொழுது நாரதரால் உபதேசிக்கப்பட்டார். அவர் குருநாதன் வாக் யத்திலேயே நின்றார் அவருக்கு என்ன துன்பம் வந்தும் தன் குரு நாதன் சொன்ன மந்திரத்தை மறக்கவில்லை இவர்கள் சம்பந்தம் மர்க்கட ஞாயமுடையது

மார்ஜாலமென்பது:—குருநாதனே சிடனுக்கு அன்னஆகாராதி கள் தந்து காப்பாற்றுகிறது கிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் உள்ள சம்பந்தம் மார்ஜால ஞாயமுடையது

சங்கம ஞாயம்:—ஓர் நதியானது கிரியிறன்றி பல கற்களி லும் முட்களிலும் மேடுகளிலும் குகைகளிலும் பிரவகித்து சமுத்தி ரம் எங்கே எங்கே என்று தேடுவதுபோல் அதிவேகமாய் நாடிவர ஆழிதன்னைச் சரணமடையவரும் சிடனுக்கு அஞ்சலிவதுபோல் கால் மைலுக்கு அப்பாலிருந்துகொண்டே இதோ இதோ இங்கே இருக்கிறேன் வருவாய் என்று தன் அலைகளாகிய கரத்தினால் கூவி யழைக்க, நதியும் சமீபமாக வர "மதலாய் நீ சிறுவன் இதற்குள் என்னையடையத் தகுதியன்று; நீ இன்னும் இவ் உலகத்தில் வாழ்ந்து என்னை அடைகுதி" யென்று சோதிப்பதுபோல் தன்னுடன் சேர வரும் அவ்வாற்றைத் தன்னலைகளால் ஒதுக்கித்தள்ள, அந்நதியானது 'ஐயகோ! பாறைகளிலும் அசுத்தங்களிலும் தாக்குண்டு மிகுந்த கஷ்டத்தையடைந்தேன்; இனி இத்துயரத்தை அநுபவிக்கமுடியாது: அடியேனை பரிசோதிக்கவேண்டாம்" என்று வேண்டுவதுபோல் தத்தளிக்க, சமுத்திரம் பக்திகண்டிரங்கி "ஆனால் உருவா" யென்று தன் மயமாகவே சேர்த்துக்கொள்வதுபோல் சிடர்கள் குருநாதர் எங்கு கிடைப்பாரோ? எப்பொழுது கிடைப்பாரோ? நாம் எப்பொ ழுது ஞானத்தையடைவோம்? என்ற வருத்தத்துடன் காடுகளிலும் நாடுகளிலும் யாத்திரை செய்துவரும்பொழுது பக்குவமடைந்த காலத்தில் குருநாதன் தோன்றி பரிசோதித்து ஞானத்தைப்போதித்து தன்மயமாக்கிக்கொள்வார். இவர்கள் சம்பந்தம் சங்கமஞாயமுடை

யது இதற்கு மேலே வரையப்பட்ட பதமபாதாசாரியாருடைய சரித்திரமே போதிய சான்றும்.

ஆகையால் எய்துதற்கரிய மானிடஜென்மமெடுத்த நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டிய பேறறைச் சற்குருவாயிலாக அடைந்து வையிற் கதிர்வேலனால் திருவடிக்கீழ் உய்வோமாக.

வருவா யருவா யுளதா யிலதாய
மருவாய மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் வுதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

## முடிவுரை

பெருமைமிக்க பெரியோர்களே!

குருபக்தியும் சாஸ்திர உணர்ச்சியும் இல்லாத அடியேனுடைய சிற்றறிவினால் வாசித்ததைச் சிறிதுவரைந்தேன். அடியேன் எழுதின கட்டுரை சொன்னயம் பொருணயம் முதலியவற்றில் மிகவுங்குறைந்ததே ஆயினும் பசுக்கூட்டங்களுடன் செல்லும் ஒரு குருட்டுப்பசுவும் அவற்றின் பின்செல்லும் காரணத்தால் சுகமாக ஊர்போய்ச் சேர்வதுபோலவும், வாழைநாரிடத்தில் வாசனையில்லாவிடினும் பூவுடன் சேர்ந்த காரணத்தினால் வேதங்களும் தேடித்தேடிக் காணொணாத தேவனுடைய திருமுடியில் ஏறுவது போலவும், அறிவிற்சிறந்த என் தமையனார் காரணராக எழுதிவரும் திருப்புகழமிர்தத்தினுடன் கடைப்பட்ட என் கட்டுரையும் உங்கள் பார்வைக்குறியனவாகுமென்றே துணிந்து எழுதினேன்

உங்கள் நலலாசியை விரும்பும்
அடிமை
சச்சிதானந்தன்.

---

குறிப்பு:—"திருப்புகழமிர்தம் ஆபீஸ்" இடம் மாறி இருக்கிறதென்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கிறோம்.

புதுவிலாசம்:

"திருப்புகழமிர்தம் ஆபீஸ்",
108, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.